2024 பிப்ரவரி 21] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

பாதுகாப்புச் சட்டம், 1986 பிரிவு 5-ன்கீழ் சுற்றுச்சூழல் இழப்பீடாக 5 கோடியே 92 இலட்சத்து 50 ஆயிரத்து 888 ரூபாய் ஏன் வசூலிக்கக்கூடாது என்று notice *கொடுத்ததன் அடிப்படையில், உடனடியாக அந்தத் தொகையைக் கட்டுவதற்கும் அந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது. இத்தொழிற்சாலை தொழில்நுட்பக் குழு பரிந்துரை செய்துள்ள அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது என்பது தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் உறுதிசெய்யப்பட்ட பின்பே அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய 2023-2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்று மற்றும் இருபத்து இரண்டு ஆகிய 2 அறிக்கைகளையும் மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஆறு முதல் நூற்று தொண்ணூறு வரையிலான 35 அறிக்கைகளையும் பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*